தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

செவ்வாய்க்கிழமை, 1978 மார்ச் 28.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகுபேரவைத் துணைத் தலைவர் திரு. எஸ். திருநாவுக்கரசு அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

திருவில்லிப்புத்தூரில் வீட்டு வசதித் திட்டம்.

* குறுகியகால வினா 10— திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருவில்லிப்புத்தூரில் 1974–75 ஆம் ஆண்டில் வீட்டுவசதி வாரியத்தில் இருந்து ரூபாய் 4.60 இலட்சம் மதிப்பில் 60 வீடுகள் கட்ட எடுத்துக் கொண்ட திட்டம் கைவிடப்பட்டது உண்மையா ?

(ஆ) இல்லை என்றால், இந்தத் திட்டம் எந்த அளவில் உள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :— (அ, ஆ) திருவில்லிப்புத்தூர் நகரம், சுண்ணாம்புக்காரத் தெரு, பள்ளிவாசல் குடிசைப் பகுதிகள் அகற்றும் திட்டத்தை ஒத்திவைப்பது என, 1975 ஆம் ஆண்டு ஜூலை மாதம், அப்போதிருந்த அரசு தீர்மானித்தது உண்மை. அதன்படி நில ஆக்கிரமிப்புப் சட்டம் 4(1) விதியின் கீழ், குடியிருப்புகள் கட்டுவதற்குத் தேவைப் பட்ட 63 செண்டு நிலத்தை ஆர்ஜிதம் செய்யும் பொருட்டு வெளியிட்ட அறிக்கையை 1975 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் அரசு விலக்கத் தீர்மானித்தது.

வெளியூர் புறங்களில் குடிசைப் பகுதிகள் அகற்றும் வேலையைப் புதுப்பிக்கும் திட்டத்தின் ஒரு அம்சமாக, திருவில்லிப்புத்தூர் பள்ளிவாசல் குடிசைப் பகுதிகள் அகற்றும் திட்டத்தையும், அதன் தொடர்பான நில ஆர்ஜித நடவடிக்கைகளையும் புதுப்பிப்பது என இவ்வரசு கருத்து கொண்டுள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி : திராவிட முன்னேற்றக் கழக அரசால் கைவிடப்பட்ட இந்தத் திட்டத்தைப் புரட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் உள்ள அமைச்சரவையில் உள்ள நம் மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் நிறைவேற்றுவதற்கு முன் வந்ததற்காக என் தொகுதி மக்கள் சார்பில் முதலில் நன்றி தெரிவித்துக் கொண்டு, இந்தத் திட்ட வேலை எப்போது ஆரம்பிக்கப்படும், எப்போது முடியும், இதற்காக எவ்வளவு ரூபாய் செலவழிக்கப்படவுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : 1971-ல் போட்ட திட்டம் 60 குடியிருப்புகளுக்கு ரூ. 4.82 இலட்சம். ஆனால் இப்போது ஒன்றும் நஷ்டம் இல்லை. தற்போது ரூ. 11.13 லட்சம் மதிப்பு கொண்ட 96 குடியிருப்புகள் கட்டுவதற்காக பள்ளிவாசல் குடிசைப் பகுதி அகற்றும் திட்டத்தைப் புதுப்பித்து வீட்டுவசதி வாரியம் அரசுக்கு அனுப்பியுள்ளது. நில ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை புதுப்பிப்பது சம்பந்தமான செயற்குறிப்புகளை வீட்டுவசதி வாரியம் இன்னும் அனுப்பவில்லையானாலும், இத் திட்டத்தை செயல்படுத்துவதற்கு அவை மிகவும் தேவையாகும். தொடர்பான மேல் நடவடிக்கைகளை மேற்கொள்வது என உத்தேசிக்கப்பட்டுள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி : தமிழ்நாடு முழுவதும் இந்த மாதிரி வீட்டுவசதி வாரியத்திலிருந்து திட்டம் போட்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் கட்டாமல் இருந்து விட்டார்கள். மீண்டும் திருவில்லிப்புத்தூரில் கட்டுவது போல் கட்டுவதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : எங்கெங்கே இப்படியெல்லாம் விடப்பட்டிருக்கிறது என்ற தகவலைச் சேகரித்துக் கொடுத்தால் விரைவில் அவைகளுக்குத் தக்க நடவடிக்கைகள் எடுக்க முயற்சி செய்யப்படும்.

வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை.

* குறுகிய கால வினா 11— திரு. எஸ்.ஜே. இராமசாமி : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம், திருவலத்தில் உள்ள வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 400 ஊக்க போனஸ் வழங்குவதாக வாக்குறுதி அளிக்கப் பட்டது உண்மையா ?